செல்வமே சீர் தாருமே

சிவ செல்வராஜ்

சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்,

கன்னியாகுமரி 629702

காணிக்கை

திரு அருட்பா தந்த

திருவருட் பிரகாச வள்ளலார்

இராமலிங்க சுவாமிகள்

பொற்பாதங்களில்

பணிவுடன் சமர்ப்பிக்கின்றேன்

தோற்றம்	:	05-10-1823
சன்மார்க்க சங்கம்	:	1865
சத்திய தருமச்சாலை	:	1867
சித்தி வளாகம்	:	1870
சத்திய ஞான சபை	:	1872
ஒளியாகி எங்கும் நிறைந்தது	:	30-01-1874

செல்வமே சீர் தாருமே

ஞான சற்குரு - ஸ்ரீலஸ்ரீ
சிவ செல்வராஜ்

சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்
வசந்தம் இல்லம் - வடக்கு குண்டல்,
கன்னியாகுமரி - 629 702.
Cell : 9245153454

பதிப்பு விபரம்

நூல்	:	செல்வமே சீர் தாருமே
ஆசிரியர்	:	சிவ செல்வராஜ்
பொருள்	:	ஆன்மீகம்
உரிமை	:	S.S. சுயம்ஜோதி
வெளியிடுவோர்	:	சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் வசந்தம் இல்லம் - வடக்கு குண்டல் கன்னியாகுமரி - 629 702 Cell : 9245153454
முதல் பதிப்பு	:	ஆசிரியரின் 14-வது திருமண நாள் 08-04-2006 1000 பிரதிகள்
காணிக்கை	:	ரூ. 10
கிடைக்குமிடம்	:	ஜெயகுமாரி ஸ்டோர்ஸ் கோர்ட் ரோடு, நாகர்கோவில் - 629 001 Ph : 04652 - 221307
		R. சிவலிங்கம் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் பிளாக் எண் 14, K.M.A. கார்டன், சின்னாண்டிமடம், கொடுங்கையூர், சென்னை - 600118 Cell - 94443 62227
		G. நாராயணா சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் கதவு எண் 2, 4/110, 106-வது தெரு, முத்தமிழ்நகர் கொடுங்கையூர், சென்னை - 600118
		G. கோபாலகிருஷ்ணன் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் 65, நரசிங்கபுரம் காலனி, செங்குன்றம் ரோடு, சிங்கபெருமாள் கோவில் - 603204
		N. கோபால் சாமிராவ் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் C-3, பஞ்சாப் ரோடு, பிளாக் - 4, நெய்வேலி - 607801.
அச்சிட்டோர்	:	நாஞ்சில் ஆப்செட் பிரிண்டர்ஸ், கோர்ட் ரோடு, நாகர்கோவில். Ph : 233853

ஆசிரியரின் பிற ஞான நூல்கள்

கண்மணி மாலை	ரூ. 50
அருள்மணி மாலை	ரூ. 50
அஷ்டமணி மாலை	ரூ. 50
ஸ்ரீபகவதி அந்தாதி	ரூ. 10
அருட்பெருஞ்ஜோதி அந்தாதி	ரூ. 10
சன்மார்க்க தெய்வம்	ரூ. 10
சற்குரு கோவிந்த சுவாமிகள்	ரூ. 10

வாங்கி! படித்து! உணர்ந்து? வாழ்வாங்கு வாழ்க!

அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி

சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்

வசந்தம் இல்லம், வடக்கு குண்டல்,
கன்னியாகுமரி - 629 702

பணிவுரை

ஆன்மநேய ஒருமைப்பாடுடையீர்,

வந்தனம். நன்றி. நலமே நிலவுக. எல்லாம் வல்லவரான, எங்கும் நிறைந்த இறைவன் திருவருளால், சற்குரு திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அவர்கள் ஆசியால், அடியேனை ஆன்மீக பாதையில் நடைபயில வைத்த கருணையின் திருஉருவம் ஜோதி இராமசாமி தேசிகர் அவர்கள் தூண்டுதலால், அடியேன் 21-03-1992-இல் முதன்முதலாக கண்மணி மாலை என்னும் ஞானவிளக்கம் கூறும் நூலை ஞானிகள் ஆசியுடன் வெளியிட்டேன்.

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் என் உள்ளிருந்து தூண்ட பற்பல கவிநூற்கள் ஆக்கினேன். இறைவனை சுட்டும் இனியபாக்களே என் கை எழுதியது! ஆன்மீக வழிகாட்டும் அறிவுப் பாடல்களே! எனது பிரார்த்தனையும் கூடவே இணைந்தது.

இரண்டாவதாக 21-12-1995 அனுமன் ஜெயந்தியன்று தேரூர் குருமகாதேவ் இராமதாச பரமஹம்ஸர் அவர்கள் ஆசியால் அடியேன் எழுதிய விநாயகர் அனுமன் துதிகள் 108-ஐ இலவச புத்தகமாக மதுரை அன்பர் திரு. A. மகாலிங்கம் அவர்கள் வெளியிட்டார்கள்.

மூன்றாவதாக 23-01-1996 தோட்டியோடு ஸ்ரீ மௌன குரு சுவாமிகள் குருபூஜையன்று, குருவருளால் அடியேன் எழுதிய ஸ்ரீ மௌனகுரு சுவாமிகள் துதிகள் 108-ஐ இலவச புத்தகமாக இரணியல் அன்பர் திரு. K. திருநீலகண்டன் அவர்கள் வெளியிட்டார்கள்.

நான்காவதாக 28-07-1996 பிரதோஷத்தன்று மருந்துவாழ்மலை ஓம் உன் திருவருளடி ஆனந்த காளிதாசன் சுவாமிகள் அவர்கள் ஆசியால் அடியேன் எழுதிய ஸ்ரீ சுந்தரேஸ்வரர் துதிகள் 108-ஐ இலவச புத்தகமாக ஆரல்வாய்மொழி ஜோதி குரு ஞானசபை அன்பர் சிவத்திரு இராமசாமி நாடார் அவர்கள் வெளியிட்டார்கள்.

ஐந்தாவதாக 16-09-1996 விநாயகர் சதுர்த்தியன்று ஸ்ரீ அறுகம்புல் சித்தர் நடராஜ சுவாமிகள் அவர்கள் ஆசியால் அடியேன் எழுதிய ஸ்ரீ அறுகம்புல் சித்தி பாலவிநாயகர் துதிகள் 108-ஐ இலவசப் புத்தகமாக கோணம் ஸ்ரீ அறுகம்புல் சித்தர்தபோவன டிரஸ்ட்டார் வெளியிட்டார்கள்.

ஆறாவதாக 13-10-1996 நவராத்திரி முதல் நாளில் திருவருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அவர்களின் 174-ஆவது திருஅவதார தின நன்னாளில் என் குரு ஜோதி இராமசாமி தேசிகர் அவர்கள் ஆசியால் அடியேன் எழுதிய ஸ்ரீ ஆயுர் தேவி துதிகள் 108-ஐ இலவசப் புத்தகமாக வேம்பனூர் அன்பர் திரு. P.K. மாதவன் நாயர் அவர்கள் நினைவாக அவர்தம் மனைவி திருமதி. M. ஹைமாவதி தங்கச்சி அவர்கள் வெளியிட்டார்கள்.

ஏழாவதாக, 14-01-1997 பொங்கல் நாளில் அடியேன் எழுதிய தேரூர் குருமகாதேவ் இராமதாச பரமஹம்சர் போற்றி பாடல்கள், ஸ்ரீ அழகிய மணவாள விநாயகர் துதிகள் ஆக 108-ஐ இலவசப் புத்தகமாக பள்ளத்தூர் வாழும் உத்தம தம்பதிகள் திரு. S. தங்கமணி நாடார் திருமதி. S. தங்கப்பழம் நாடாச்சி ஆகியோர் வெளியிட்டார்கள்.

எட்டாவதாக 07-03-1997 மகா சிவராத்திரி திருநாளில் அடியேன் எழுதிய திருப்பன்னிபாகம் அருள்தரும் ஸ்ரீ ஆஞ்சநேய ஸ்வாமி துதிகள் 108-ஐ இலவசப் புத்தகமாக, எனது தந்தை ஜெயகுமாரி ஸ்டோர்ஸ் உரிமையாளர் திரு. K. சிவசுப்பிரணியபிள்ளை அவர்களின் 80 வயது நிறைவைக் கொண்டாடும் விதமாக எனது மகன் S.S. சுயம்ஜோதி Pre. K.G. அவர்கள் வெளியிட்டார்கள்.

ஒன்பதாவதாக பேயோடு, அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலய அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக திருநாளில் 15-06-1997-ல் பேரருள் புரியும் பேயோடு ஸ்ரீ குருதவசி ஐயா பாமாலை 108-ஐ இலவச புத்தகமாக ஸ்ரீ குருதவசி ஐயா குடும்பத்தாராகிய பேயோடு ஊர் பொதுமக்கள் வெளியிட்டார்கள்.

பத்தாவது நூலாக, அடியேன் முதலில் வெளியிட்ட கண்மணிமாலை பல புதிய பகுதிகள் சேர்க்கப்பட்டு 10-09-2002 விநாயகர் சதுர்த்தியன்று கன்னியாகுமரி அருள்மிகு ஸ்ரீ பகவதி அம்மன் பொற்பாதங்களில் சமர்ப்பித்து வெளியிட்டோம்.

பதினொன்றாவது நூலாக, சற்குரு வள்ளலார் தூண்டுதலால் அடியேன் அருள்மணி மாலை என்னும் ஞானவிளக்க நூலை எழுதி 18-02-2004 மஹா சிவராத்திரியன்று கன்னியாகுமரி அருள்மிகு ஸ்ரீ பகவதி அம்மன் பொற்பாதங்களில் சமர்ப்பித்து வெளியிட்டோம்.

பன்னிரண்டாவது நூலாக அடியேனை காத்து இரட்சிக்கும் அகில உலக அன்னை, ஆதி சக்தி, கன்னிகா பரமேஸ்வரி, பாலா, வாலை, தாய், கன்னியாகுமரி அருள்மிகு ஸ்ரீ பகவதி அம்மனை வேண்டி பிரார்த்தித்து ஸ்ரீ பகவதி அந்தாதியை இயற்றி நாகர்கோவில் கெங்கா ஜுவெல்லர்ஸ் பேருதவியால் 23-06-2004 ஆனி-மகம் மாணிக்கவாசகர் குருபூஜையன்று அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகி, மகாமாயை கன்னியாகுமரி

அருள்மிகு ஸ்ரீ பகவதி அம்மன் பொற்பாதங்களில் சமர்ப்பித்து வெளியிட்டோம்.

பதின்மூன்றாவது நூலாக, எல்லாம் வல்ல இறைவன் அருட்பெருஞ் ஜோதி ஆண்டவர் திறத்தைக்கூறி, அருள்புரியும் விதத்தை வெளிப்படுத்தி, அடியேன் உள்ளிருந்து சற்குரு வெளிப்படுத்தி அருளிய, ஒப்பற்ற அருட்பெருஞ்ஜோதி அந்தாதி என்னும் நூலை 25-01-2005 தைப்பூசத்தன்று திருவண்ணாமலை ஆகாஷ் ஹோட்டல்ஸ் உயர்திரு. S.R. முத்து கிருஷ்ணன் பேருதவியால் வடலூரில் தர்ம சாலை-யில் வெளியிடப்பட்டது.

பதினான்காவதாக சன்மார்க்க தெய்வம் எனும் நூலை நாகர்கோவில் ஜெயகுமாரி புத்தக நிலைய உரிமையாளர் S. அசோக்குமார், பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா 80-வது பிறந்த நாளான 23-11-2005-ல் வெளியிடுகிற புண்ணியம் பெற்றார்.

பதினைந்தாவது நூலாக "சற்குரு கோவிந்த சுவாமிகள்" 30-12-2005 ஸ்ரீ ஆஞ்சநேயர் ஜெயந்தி திருநாளில் ஆரல்வாய்மொழி இராமலிங்க சுவாமி நிலைய அன்பர் ஜோதி ஸ்ரீ N. கனக சபாபதி அவர்களால் வெளியிடப்பட்டது.

பதினாறாவது நூலாக அடியேன் ஏற்கனவே இலவசமாக வெளியிட்ட எட்டு நூற்களை தொகுத்து "அஷ்டமணி மாலை" என்று 06-04-2006-ல் அடியேனின் 50-வது பிறந்தநாளில் நட்சத்திரத்தில், 1992-ஆம் வருட முதலே எம்மை ஆதரித்துக் காத்தருளும் என் உயிர் சென்னை அன்பர்கள் ஜோதி ஸ்ரீ த. முருகேசன், ஜோதி ஸ்ரீ G. நாராயணா ஜோதி ஸ்ரீ G. கோபாலகிருஷ்ணன் ஆகிய மும்மூர்த்திகளும் வெளியிட்டார்கள்.

பதினேழாவது நூலாகவும், அடியேனின் பொன்விழா ஆண்டு வெளியீடாகவும், ஆன்மீக வெள்ளிவிழா ஆண்டுவிழா வெளியீடாகவும் இந்த "செல்வமே சீர் தாருமே" நூல் அடியேனின் 14 வருட திருமண நிறைவு நாளில் 08-04-2006-ல் எம் உயிரோடு கலந்துவிட்ட ஜோதி ஸ்ரீ R. சிவலிங்கம் சென்னை அவர்கள் வெளியிடுகிறார்கள்.

எம் ஆன்மீகப் பணியில் உற்ற துணையாக இருந்து என்றும் உதவிடும் கன்னியாகுமரி நாகர்கோவில் நெய்வேலி சென்னை மற்றும் அனைத்து அன்பர்களுக்கும் என்றும் நன்றிகூற கடமைப்பட்டுள்ளேன்.

எல்லோரும் எல்லா நலனும் பெற்று நலமுடன், வளமுடன், சிறப்புடன் வாழ்வாங்கு வாழ வேண்டி இறைவனை வணங்குகின்றேன்.

என்னுயிர் காத்த மகானுபாவாக்கள் இட்ட பணியை செவ்வனே செய்கிறேன்.

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!

என்றும் உண்மையுள்ள,

சிவ. செல்வராஜ்,

கன்னியாகுமரி.

செல்வமே சீர் தாருமே!

என்னை நானே கேட்டேன்! என்னிடம் நானே கேட்டேன்! என்னுள் இருக்கும் என் உயிரை அறிய, உணர ஆசை!

நான் யார் என அறியும் முயற்சி!

நான்தான் அது என ஆன்றோர் அறிவித்ததை உணர முயற்சி!

உள்கடந்து போகையிலே உயிரைப் பற்றும் தவம்!

எங்கும் நிறைந்த எல்லாம் வல்லவரே என்னுள்ளும் இருக்கிறாரல்லவா அவரிடமே கேட்கலாமே!? என்ற எண்ணம்! கேட்டேன்! ஏராளமாக!! உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன்.

அடியேன் உள்ளத்தில் உதித்தவை பாமாலையாயிற்று.

ஒவ்வொரு பாடலாகவும் படிக்கலாம்.

ஒவ்வொரு பாடலின் முதல் வரிகளை சேர்த்துப் படிக்கலாம்.

ஒவ்வொரு பாடலின் இரண்டாவது வரிகளை சேர்த்தும் படிக்கலாம்!

ஒவ்வொரு பாடலின் மூன்றாவது வரிகளை சேர்த்தும் படிக்கலாம்!

ஒவ்வொரு பாடலின் நாலாவது வரிகளை சேர்த்தும் படிக்கலாம்!

நல்லது சொல்ல வேண்டும் என்ற ஆவலில் பிறந்தது இது!

வாழ்த்துங்கள்!

ஆதரியுங்கள்!

செல்வமே சீர் தாருமே

செல்வம் வேண்டுமென கதறுகிறேன் கவனிப்பாயா
செல்வம் பெயர்சூட்டி பெற்றோர் மகிழ்ந்தாரே
செல்வம் பதினாறும் நான்பெற்றே ஓங்கிநிற்க
செல்வம் வாரிவழங்க என்செல்வமே சீர்தாருமே

கவனிப்பாயா பஞ்சபூதத்தை கண்களிலேயே எல்லாம்
மகிழ்ந்தாரே உரைத்தது மேல்எழுத்தாம் கல்லாம்
ஓங்கிநிற்க உத்தமனாய் வழிஇல்லை பல்லாம்
சீர்தாருமே சிவமே சீலமிகுந்து நல்லாம்

எல்லாம் தாருமே எனக்கு நீரே
கல்லாம் மனதை உருக்கிப் பாரே
பல்லாம் பிரிவுதனை சேர்த்து ஊரே
நல்லாம் தெளிவு தருவது சீரே

நீரே எம்மை உணர்த்தும் தெய்வமே
பாரே போற்றிட பாக்கியம் தருவாயே
ஊரே அறிந்திட ஒண்பொருள் காட்டுவாயே
சீரே நாதமாய் விந்துவாய் ஓங்குமே

தெய்வமே துணிந்தால் வெல்லலாம் மனத்தை
தருவாயே உன்னையே காணிக்கையாக திருவடியில்
காட்டுவாயே அன்பை அவனியிலே யாரிடமும்
ஓங்குமே கீர்த்தி ஒப்பிலாதவன் நீதானே

மனத்தை மாசற்ற சோதியில் வையே
திருவடியில் தீர்க்கமாய் ஊன்றி நில்லே
யாரிடமும் சத்தியம் பேசியே வாழே
நீதானே நிர்மலமான சோதியை அடைவாய்

வையே கருத்தை கண்மணியில் எப்போதும்
நில்லே நெறியான வாழ்க்கையில் நீடித்தே
வாழே பாருக்கும் பசிதவிர்த்து பண்புடனே
அடைவாய் மரணமிலா பெருவாழ்வை நீயுமே

எப்போதும் பார்த்து இருக்கலாமே கண்ணை
நீடித்தே நிற்க வேணுமே சாதனை
பண்புடனே பதிநிலை பக்தர்கள் அறியவே
நீயுமே நற்கதி பெறலாமே சத்தியமே

கண்ணை கண்டுமேல் செல்ல வேண்டுமே
சாதனை படைத்தே சாகாது இருப்பாயே
அறியவே கலைகள் எல்லாமும் தருவானே
சத்தியமே சர்வ வியாபி ஒருவனே

வேண்டுமே சத்சங்கம் விமலன் அருளுக்கே
இருப்பாயே மண்ணூழி காலமும் மகிழ்ந்தே
தருவானே சகலமும் வாழ்வாங்கு வாழவே
ஒருவனே எங்குமாய் நிறைந்து நின்றானே

அருளுக்கே அடிமை கருணைக்கே சரணம்
மகிழ்ந்தே இருப்பான் மாநிலமே துச்சமென
வாழவே பிறந்தான் வாழ்ந்தே இருப்பான்
நின்றானே உலகம் உள்ளளவும் ஒளியாய்

சரணம் அடைந்தால் சந்ததமும் இன்பமே
துச்சமென இருந்தால் கடம்விட்டு போகுமே
இருப்பான் பொன்னாக பக்குவமாய் காத்தால்
ஒளியாய் எல்லோரும் ஒப்பும் பூரணமே

இன்பமே யாவரும் விரும்புவது இயல்பே
போகுமே மனம் மந்தியென தாவுமே
காத்தால் மும்மலம் சீவனை பற்றாது
பூரணமே காணலாம் பேரின்பம் அடையலாம்

இயல்பே சாதகன் மெய்ப்பொருளை வெளிப்படுத்தல்
தாவுமே ஒளியில் செகமாயை நீங்கிடில்
பற்றாது இருக்கும் மெய்ப்பொருளை பற்றினால்
அடையலாம் சாயுச்சியம் அகிலத்தை வெல்லலாம்

வெளிப்படுத்தல் ஞானிகள் எப்போதும் புரிந்தனர்
நீங்கிடில் சன்மார்க்கம் பெறலாகுமா பேரின்பம்
பற்றினால் துன்மார்க்கம் கிட்டுமோ முக்தி
வெல்லலாம் உலகையே வீண்என்று தள்ளாதீர்

புரிந்தனர்	அபூர்வ	சாதனைகளை	ஆண்டவனால்
பேரின்பம்	நாம்பெற	அருளினர்	அருட்பாக்கள்
முக்தி	அடையவே	எடுத்த	பிறவியிது
தள்ளாதீர்	பொய்என	ஞானிகள்	உரைத்ததை

ஆண்டவனால்	இருக்கிறோம்	ஆட்கொண்டு	இருப்பதால்
அருட்பாக்கள்	படித்து	உணர்ந்து	அறியலாமே
பிறவியிது	பிறருக்கும்	பயனாய்	இருக்கவே
உரைத்ததை	பெருக்கி	ஒளியுடல்	பெறுவீரே

இருப்பதால்	உலகில்	இருவினை	சேருமே
அறியலாமே	சரணடைந்து	திருவினை	சேரலாமே
இருக்கவே	உலகில்	என்றென்றும்	நிலையாகவே
பெறுவீரே	உபதேசம்	பெரியோர்	மூலமே

சேருமே	சூரியனில்	சந்திரனை	விடாமலே
சேரலாமே	பின்னர்	அக்கினி	முச்சுடரும்
நிலையாகவே	இருந்தால்	போகலாம்	பரத்தோடு
மூலமே	முடிவாய்	அமையுமே	உச்சியிலே

விடாமலே	பாழிலே	சக்தியாக	சேமிப்பீர்
முச்சுடரும்	ஒன்றாய்	முடிந்தால்	சோதியே
பரத்தோடு	சீவன்	சேர்ந்தாலே	ஞானம்
உச்சியிலே	உணர்வு	பெற்று	உய்வீரே

சேமிப்பீர்	செல்வமென	பொருளோடு	அருளை
சோதியே	நாம்பெறும்	பெரும்பேறு	அன்பால்
ஞானம்	பெறுவதே	ஆன்றோர்	மொழியே
உய்வீரே	பேரருள்	பெற்று	வாழ்வீரே

அருளை	பெற்றால்	அன்புமயம்	ஆவோமே
அன்பால்	மேலும்பல	சித்திகள்	பெறலாமே
மொழியே	மாந்தருள்	மாணிக்கம்	நீதானே
வாழ்வீரே	மனிதன்	இவனென	போற்றவே

ஆவோமே	அத்தன்	அவனுக்கு	ஆளாகவே
பெறலாமே	பேரும்	புகழும்	சிறப்புமே
நீதானே	பரமன்	புகழ்பாடும்	பாமரன்
போற்றவே	பொருளை	கிட்டுமே	புண்ணியம்

ஆளாகவே பெண்ணான நாம் முயல்வோம்
சிறப்புமே ஆணான அவனை அடைதலே
பாமரன் பரமன் பாதத்தில் இணைந்தாலே
புண்ணியம் எடுத்த பிறவி உய்தலே

முயல்வோம் மீண்டும் முயற்சி விடாதீர்
அடைதலே லட்சியம் அவசரம் கொள்ளாதீர்
இணைந்தாலே இன்பம் சின்னதும் பெரியதும்
உய்தலே முடிவாம் உணர்ந்து கொள்வீரே

விடாதீர் கூடிப் பிரியேல் கோமானை
கொள்ளாதீர் புலாலை குவலயம் நமதே
பெரியதும் அருளதும் கூடினதுவே சோதி
கொள்வீரே குமரன் சிவபாலன் திருவடியை

கோமானை குவலயம் ஆனவனை பரமனை
நமதே நம்பினால் நாயகன் ஆவானே
சோதி தன்னில் காணலாம் முதல்வனை
திருவடியை சிக்கென பிடித்து வாழுமே

பரமனை பார்க்க பாரெலாம் அலையாதே
ஆவானே கண்ணில் ஒளியாய் கலந்ததே
முதல்வனை மூலத்தை எல்லாம் ஆனவனை
வாழுமே அறிந்தே அகத்தில் கண்டே

அலையாதே நிலையில்லா வாழ்வை நம்பி
கலந்தே இருக்கும் இன்பமும் துன்பமும்
ஆனவனை ஒளியாய் சற்குருவாய் ஏற்றே
கண்டே மகிழ்ந்தே நிலையானதை அறியே

நம்பி மோசம் போனவர் இல்லையே
துன்பமும் தாங்கிக் கொண்டால் வெற்றியே
ஏற்றே ஒளியை உந்தன் உள்ளத்தில்
அறியே கடவுளை ஆனந்த சொரூபத்தை

இல்லையே இறைவனை நம்பாதவர் வாழ்ந்தது
வெற்றியே ஆன்மநேய அன்பர் பெறுவது
உள்ளத்தில் உறுதி வாக்கில் சத்தியம்
சொரூபத்தை சுயத்தை அறிய வேணுமே

வாழ்ந்தது
பெறுவது
சத்தியம்
வேணுமே

சிலரே
அருள்
சமரசம்
சாந்தி

வீழ்ந்தது
என்னில்
சன்மார்க்கம்
கிட்டுமே

பலரே
பரகதியே
நிலவவே
அதனால்

பலரே
பரகதியே
நிலவவே
அதனால்

உரைத்து
வேண்டும்
அமைதி
மட்டுமே

மகிழ்ந்தது
பார்வதி
உள்ளிலும்
அனுபவம்

ஒன்றே
நாதனே
புறத்தும்
கிட்டுமே

ஒன்றே
நாதனே
புறத்தும்
கிட்டுமே

கண்ணின்
பாதனே
ஒளிபரவி
உலகுக்கு

மணியில்
வேதனை
புருடன்
உன்னால்

ஒளியில்
தீருமே
ஆகலாமே
இன்பம்

ஒளியில்
தீருமே
ஆகலாமே
இன்பம்

நடந்தால்
நோயெலாம்
சித்தனாய்
எங்குமாய்

உலகம்
சுகம்பல
சக்தியுடன்
பரவி

உவக்கும்
பெறுவாய்
மேன்மையும்
நிற்குமே

உவக்கும்
பெறுவாய்
மேன்மையும்
நிற்குமே

உள்ளம்
ஒலியை
தாழ்வும்
நீடித்து

உறுதிபெற
ஒளியை
அவரவர்
உலகில்

வேண்டும்
நேயத்தை
செயலாலே
உடலே

வேண்டும்
நேயத்தை
செயலாலே
உடலே

அடியார்
மணியில்
தீவிரமாக
இதற்கு

வினைகளை
வைத்து
சாதனையால்
உறுதுணை

தீர்ப்பாயே
நில்லே
வெல்வாயே
நம்புவாயே

தீர்ப்பாயே
நில்லே
வெல்வாயே
நம்புவாயே

உலகில்
நீதிநெறி
மனத்தை
ஞானிகள்

உந்தன்
பிறளாமல்
மாசிலாதவன்
உரைத்தது

கடமை
வாழ்வில்
தானாகி
அனைத்தும்

கடமை
வாழ்வில்
தானாகி
அனைத்தும்

எதுவெனில்
என்றால்
தத்துவமான
அர்ப்பணித்தே

கடவுளை
வாழ்வாங்கு
தன்னுள்
அகத்துள்

சேர்தலே
வாழ்வதே
உறைபவனை
இருத்தே

சேர்தலே	பரத்துடன்	என்றால்	பாக்கியம்
வாழ்வதே	அவனால்	என்பதை	உணருக
உறைபவனை	உணர்த்த	உணர்ந்து	ஓங்குக
இருத்தே	இகபர	சுகம்	தருவோனை
பாக்கியம்	மரணமிலா	பெருவாழ்வு	பெறுவதே
உணருக	உலகில்	எங்குமாய்	இலங்குபவனை
ஓங்குக	அவன்	திருநாமம்	உழையே
தருவோனை	சிரம்	தாழ்த்தி	வணங்கே
பெறுவதே	சாதுக்கள்	நட்பை	முக்கியம்
இலங்குபவனை	இன்றே	காணலாம்	கண்ணால்
உழையே	ஓய்வின்றி	உதவுவான்	உறுதியே
வணங்கே	வாழ்த்தே	வருவான்	தருவான்
முக்கியம்	உடல்	முனைந்தால்	காக்கலாம்
கண்ணால்	பார்த்து	கருத்தில்	இருத்தியே
உறுதியே	கொண்டு	உவப்புடன்	சென்றால்
தருவான்	தாகம்	தீர்ப்பான்	அன்பருக்கே
காக்கலாம்	விரதம்	நித்தமும்	கனிவுடன்
இருத்தியே	எட்டின்	மீதே	நின்றால்
சென்றால்	முச்சுடரும்	ஒன்றாகி	உதயமாகி
அன்பருக்கே	காட்சி	தருவான்	அப்பன்
கனிவுடன்	நோக்க	கருணை	பிறக்குமே
நின்றால்	நிலைத்து	நிர்குண	பிரம்மனே
உதயமாகி	மாயை	நீக்கி	அருள்வான்
அப்பன்	அம்மை	சற்குரு	சகலமுமே
பிறக்குமே	சோதி	பேதமை	நீங்கினால்
பிரம்மனே	ஆகலாம்	பேருவகை	கொள்ளலாம்
அருள்வான்	யாருக்கும்	எல்லாம்	அவன்தானே
சகலமுமே	அவனாயில்	நானும்	அவனே
நீங்கினால்	துன்பம்	சேர்ந்தால்	பேரின்பம்
கொள்ளலாம்	தூயவர்	நல்லவர்	நட்பை
அவன்தானே	சாதகன்	சகலமும்	உணர்வான்
அவனே	மனிதன்	மகாத்மா	தெய்வம்

பேரின்பம் பெறுவோம் சிற்றின்பம் நீக்குவோம்
நட்பை அன்பை அனைத்து உயிரிலும்
உணர்வான் கருணையே வடிவான மனிதனே
தெய்வம் தொழுது சிறப்பு அடைவாயே

நீக்குவோம் தீயோர் சேர்க்கை பாவமே
உயிரிலும் மேலான சத்தியம் காப்போமே
மனிதனே மனிதனாய் வாழ்வதே வாழ்வாம்
அடைவாயே ஆதியுடன் கலந்த நிலையை

பாவமே பசித்தோர் முகம் பாராவிடில்
காப்போமே உணவு தந்து சீவனை
வாழ்வாம் அதுவே சிறந்த தொண்டு
நிலையை அறிந்து காத்து மகிழ்வாயே

பாராவிடில் சோதியை இருளே சூழும்
சீவனை சிவனோடு சேர்க்கும் தந்திரம்
தொண்டு பட்டு தூயவனாய் இருத்தலே
மகிழ்வாயே மாதவம் புரிந்தோம் என்றே

சூழும் உலகம் யாவுமே நின்அருளே
தந்திரம் மந்திரம் ஏதும் கிடையாது
இருத்தலே சும்மா தூங்காமல் தூங்கியே
என்றே ஞானிகள் கூறினர் உலகுக்கே

நின்அருளே பெற்று கவிகள் பாடுகிறேன்
கிடையாது உன்னைப் போல் அருளாளன்
தூங்கியே சுகம் பெற்றுய்ய நெறிகாட்டு
உலகுக்கே பாதை சொன்ன வள்ளலே

பாடுகிறேன் பலவிதமாய் பரிவுடன் ஆதரியே
அருளாளன் வாழையடி வாழையென வருவானே
நெறிகாட்டு வழிகாட்டு திருஅருட் பிரகாசரே
வள்ளலே எம்மையும் ஏற்றுக் கொள்ளே

ஆதரியே ஆதரவற்ற ஆத்மாவை அன்புடனே
வருவானே உந்தன் வல்லமை கண்டுதானே
பிரகாசரே சுயமாய் உன்னை நாடியே
கொள்ளே உள்ளே கருத்தை உறுதியாக

அன்புடனே	பார்த்து	இருப்பாய்	அம்சமாகவே
கண்டுதானே	உணர்ந்து	தானேதானாய்	மாறவே
நாடியே	பதத்தை	பார்த்தே	களிக்கவே
உறுதியாக	இருந்தால்	உயர்வுதான்	வந்திடுமே

அம்சமாகவே	இருப்பது	அவனியிலே	பெருமையே
மாறவே	மனம்	திரும்புதலே	மகிமை
களிக்கவே	கவனம்	களிகொள்ளவே	அவசியம்
வந்திடுமே	வரவால்	ஆனந்தமே	நிலைக்கும்

பெருமையே	விரும்பாமல்	பேராசை	கொள்ளாமல்
மகிமை	பேசியே	மாதவம்	புரிவோமே
அவசியம்	அன்பு	காருண்யம்	தேவை
நிலைக்கும்	நீடித்த	இன்பம்	நமக்கே

கொள்ளாமல்	மாமிசம்	மதுவகை	மறுத்தால்
புரிவோமே	புண்ணியச்	செயலே	பூவுலகில்
தேவை	அறிந்து	சிறிது	உண்ணலே
நமக்கே	நன்மைகள்	வந்திடும்	தானாகவே

மறுத்தால்	அறிய	முடியாதே	மகத்துவம்
பூவுலகில்	மனிதனாய்	பிறந்தது	எதற்காக
உண்ணலே	உறங்கலே	என்று	கழிக்கவா
தானாகவே	வந்து	விடாது	ஞானம்

மகத்துவம்	மனிதன்	தெய்வமாய்	உயர்வதே
எதற்காக	பிறந்தோம்	எதற்காக	வாழ்கிறோம்
கழிக்கவா	களிக்கவா	கவனமாக	பாருங்கள்
ஞானம்	பெறவே	மனிதனாய்	பிறந்தோமே

உயர்வதே	மேன்மேலும்	விரும்பும்	உலகில்
வாழ்கிறோம்	பரவாழ்வும்	அவ்வாறே	விரும்புக
பாருங்கள்	நீங்கள்	வாழ்வதா	வாழ்க்கை
பிறந்தோமே	போவோமே	என்று	இருக்காதீர்

உலகில்	யாவும்	மாயையே	அறிவீரா
விரும்புக	நிலையான	பொருளை	அறிந்தே
வாழ்க்கை	சந்தர்ப்ப	சூழ்நிலை	வழியல்ல
இருக்காதீர்	சோம்பி	வாழ்க்கை	நம்கையில்

அறிவீரா
அறிந்தே
வழியல்ல
நம்கையில்

நாம்
சொன்ன
வாதம்
வெண்ணை

பிறந்ததை
ஆன்றோரை
புரிவது
நெய்க்கு

வாழ்வதை
தூற்றுதல்
முறையல்ல
அலைகிறோம்

வாழ்வதை
தூற்றுதல்
முறையல்ல
அலைகிறோம்

தாமரை
நீக்கி
நீவிர்
உம்மை

இலைநீர்
போற்றி
முன்னவனை
போன்றவரை

என்னவே
மகிழ்வீரே
அறியாதது
ஆளாக்கிடவே

என்னவே
மகிழ்வீரே
அறியாதது
ஆளாக்கிடவே

ஏதுவே
இப்போதாவது
எல்லாம்
முழுமை

என்று
முயற்சி
அறிவிப்பான்
பெறவே

கலங்காதீர்
செய்தோமே
அன்னவனே
வேண்டுவோம்

கலங்காதீர்
செய்தோமே
அன்னவனே
வேண்டுவோம்

முன்னைபின்னை
சாதனைஎன
சரண்எனில்
எல்லோரும்

வினைகளை
மகிழ்வோம்
அடைவோம்
இருக்கவே

நினைத்து
வனைந்தே
பூரணத்தை
இன்புற்றே

நினைந்து
வனைந்தே
பூரணத்தை
இன்புற்றே

எப்போதும்
வள்ளலை
பூரிக்கச்
இருக்க

இருந்தாலே
இருப்போம்
செய்தே
அருளுமே

கண்மணியை
வட்டத்தினுள்
அறுகோணத்தில்
மந்திரமே

கண்மணியை
வட்டத்தினுள்
அறுகோணத்தில்
மந்திரமே

சுட்டாத
மையம்
முக்கோணம்
அதுதான்

காவியம்
பார்ப்பதே
ஒருகண்
மாமருந்தும்

இல்லையே
அறிவு
முனைவீர்
அதுதானே

இல்லையே
அறிவு
முனைவீர்
அதுதானே

ஈடுஇணை
சுத்தஅறிவே
முழுமுதல்
செயற்கரிய

இறைவனை
ஞானம்
பொருளை
செயல்

அறிந்தவருக்கே
என்பதுவே
அடையவே
என்றனரே

அறிந்தவருக்கே
என்பதுவே
அடையவே
என்றனரே

அவன்
வாழ்க்கை
சிவத்தை
அடைந்தவர்

ஆடுமிடம்
வானவில்
அவதாரம்
சொல்லே

கூடலாகுமே
போன்றதுவே
எடுத்தோமே
வேதமே

கூடலாகுமே பின்னர் ஒன்றாவோமே பிரிவில்லை
போன்றதுவே என்றுரைக்க ஒப்புவமை ஒன்றுமிலை
எடுத்தோமே கடத்தை காப்போமே சிவத்தை
வேதமே உரைத்தது இதுதவிர வேறென்ன

பிரிவில்லை அவனைவிட்டு என்றிருந்தால் பேரின்பமே
ஒன்றுமிலை இதைதவிர வேறுவேலை என்றிருந்தால்
சிவத்தை ஒளியை நம்முள்ளே இருத்திடலாம்
வேறென்ன எல்லாம் தான்ஆனவர் ஆய்விடுவோம்

பேரின்பமே வேகம் காட்டாது விவேகியாயிரு
என்றிருந்தால் எப்போது இருந்தால்என்ன ஊன்றியிரு
இருந்திடலாம் எப்போதும் தப்பாமல் பரிபூரணம்
ஆய்விடுவோம் தவறாக சொல்லவில்லை நானுமே

விவேகியாயிரு வேதனைகள் மனதை பற்றாமலே
ஊன்றியிரு உன்கண்ணில் கருத்தை செலுத்தியே
பரிபூரணம் ஊனக்கண் நெற்றிக்கண் ஆனபின்னே
நானுமே முனைகிறேன் நாயகனே காப்பாற்று

பற்றாமலே பாருலகில் பயனுற வாழலாமே
செலுத்தியே சிந்தையை சிவனிடம் இருக்கலாமே
ஆனபின்னே அமைதியே சலனம் இருக்காதே
காப்பாற்று கருணை மயமான கடவுளே

வாழலாமே எப்படியும் என்றால் சீரழிவே
இருக்கலாமே என்றெண்ணி சொத்து சேர்க்காதீர்
இருக்காதே உன்உடல் இப்படி வாழ்ந்தால்
கடவுளே என்றிருந்தால் காப்பான் கருணையே

சீரழிவே இல்லாமல் இருப்பதை பாரப்பாயே
சேர்க்காதீர் தேவையில்லா உணவை நட்பை
வாழ்ந்தால் தேறலாம் வானவரும் போற்றுவர்
கருணையோடு பார்த்தால் காலடியில் உலகமே

பார்ப்பாயே ஒன்றாக்கி எட்டும் இரண்டை
நட்பை அங்கேயே இருந்து காட்டே
போற்றுவர் சரணடைவர் வாழ்வு மேன்மையே
உலகமே உருண்டை ஒருபற்றும் இல்லாதது

இரண்டை எட்டுடன் கூட்ட பற்றாமே
காட்டே தீவிரத்தை திண்ணியன் ஆவாயே
மேன்மையே கிட்டும் மென்மையாக நெருங்கினால்
இல்லாதது இல்லையே இருப்பதுதான் நிலைக்கணுமே

பற்றாமே பற்றினால் காணலாம் பகலவனை
ஆவாயே அகார வாயே வாசலாம்
நெருங்கினால் சுத்தஒளி உனக்குள் பரவுமே
நிலைக்கணுமே என்றால் இதுதானே மார்க்கமாம்

பகலவனை பகலிலும் இரவிலும் பார்த்தால்
வாசலாம் சிறுவாசல் வழிபுகுந்து மேலேறலாம்
பரவுமே ஒளியலை முழுவதுமாக உடலிலே
மார்க்கமாம் இதனை மாநிலத்தோர் உணரவே

பார்த்தால் பார் முழுவதும் தெரியுமே
மேலேறலாம் மயிர்பாலம் கடந்தே வெட்டவெளியில்
உடலிலே கண்ணிலிருந்து தலைஉச்சி வரையிலே
உணரவே உணர்வை பெறுவதே சாதனை

தெரியுமே அண்ட பிண்ட உற்பத்தியே
வெட்டவெளியில் மனதை செலுத்தி நிலைபெறுவாயே
வரையிலே சாதனை உள்ளது அழிவில்லை
சாதனை இன்றி சாதிப்பார் யாருமில்லை

உற்பத்தியே உலகில் உள்ளவரை அண்டினால்
நிலைபெறுவாயே நிர்மலமான சோதியை அடைந்தே
அழிவில்லை உடலுக்கும் அவனியிலே அறிவாரோ
யாருமில்லை என்றில்லை ஆயிரமாயிரம் பேர்உண்டே

அண்டினால் பெரியோரை அவசியம் உபதேசமே
அடைந்தே அடுத்துநாம் திரைதனை நீக்கலாமே
அறிவாரோ ஆன்றவிந் தடங்கிய ஆசானை
பேர்உண்டே நீர்மேல் நெருப்பில் இணைந்தால்

உபதேசமே உணர்ந்து கொண்டால் உபநயனமே
நீக்கலாமே மும்மலம் தோன்றுமே அறிவே
ஆசானை தேர்ந்து நம்பிநீ நடப்பாயே
இணைந்தால் சந்திரனும் சூரியனும் பூரணமே

உபநயனமே
அறிவே
நடப்பாலே
பூரணமே

இருகண்ணே
இதைஅறியும்
ஒளிவழியில்
அடைவோம்

சக்தியும்
அக்கினியுடன்
முச்சுடர்
புகழுடல்

சிவனும்
ஒன்றாகுமே
ஒளியேற்றி
பெறுவோம்

சிவனும்
ஒன்றாகுமே
ஒளியேற்றி
பெறுவோம்

சிற்றம்பலமும்
அகார
வழிநடந்தால்
பெறவைப்போம்

இருக்குதே
உகார
இடரில்லை
பேர்பெற்றே

சீவர்களிடமே
யகாரமுமே
உனக்கே
நிற்போம்

சீவர்களிடமே
யகாரமுமே
உனக்கே
நிற்போம்

காருண்யம்
தாண்டினால்
தரிசனம்
நிலையில்லா

கொண்டால்
ஒளிஓங்கு
கிட்டினால்
வாழ்வதில்

சிவானந்தமே
கோபுரமே
புண்ணியமே
நீடித்தே

சிவானந்தமே
கோபுரமே
புண்ணியமே
நீடித்தே

பெறவேண்டில்
ஞானிகள்
செய்ததால்
நிற்கும்

சிவனோடு
பாடல்களில்
பொன்னுடல்
இராமலிங்கர்

கலப்போமே
திருஅருட்பாவே
பெற்றாரே
பெருமையே

கலப்போமே
திருஅருட்பாவே
பெற்றாரே
பெருமையே

கண்களில்
படித்தால்
பேரின்பம்
தருவதெல்லாம்

கலந்து
சிந்தித்தால்
பேணிக்
பரமான

ஆடுபவரோடு
உணர்த்தும்
கூடினவரே
பெருஞ்சோதியே

ஆடுபவரோடு
உணர்த்தும்
கூடினவரே
பெருஞ்சோதியே

ஆடுதுறை
ஊர்த்துவ
திருவோடு
ஆண்பிள்ளை

புகுந்து
ரேதசே
மனம்
சிறுசோதியே

கலக்கவே
தேவனே
ஆனவர்
பெண்பிள்ளை

கலக்கவே
தேவனே
ஆனவர்
பெண்பிள்ளை

தகுதியாக
தேவிஎனை
எல்லாம்
நான்சீர்

வேணுமே
மணக்க
எமக்கு
கொண்டு

கருணையினால்
வருவாயே
அளியுமே
வருவேனே

கருணையினால்
வருவாயே
அளியுமே
வருவேனே

என்னோடு
விரைந்து
உன்தனையும்
புகுந்தவீடு

கலக்க
வாஞ்சையோடு
அழியுமே
வாழ்த்துவாய்

சம்மதிப்பீரே
அழைக்கிறேன்
நான்எனதும்
நாயகனே

சம்மதிப்பீரே சர்வமும் அவன் செயலென்றே
அழைக்கிறேன் ஆன்மநேய ஒருமைப்பாடு கொண்டே
நான்எனது நீங்கிடில் நாயகன் நலந்தருவான்
நாயகனே வந்துநமை மணம் புரிவானே

செயலென்றே சீர்தெரிந்து சிறப்பாக செய்தால்
கொண்டே போகலாம் பிரபஞ்சம் எல்லாம்
நலந்தருவான் நாவால் இயலாது எடுத்துரைக்க
புரிவானே அற்புதங்கள் பற்பலவும் அவனியிலே

செய்தால் செயற்கரிய செப்புவர் ஞானியென்றே
எல்லாம் எனையாளும் ஈசன்செயல் என்பாரே
எடுத்துரைக்க அருட்பாக்கள் உபதேசங்கள் இனிக்குமே
அவனியிலே அவன்தான் விடிவெள்ளி சிரஞ்சீவி

ஞானியென்றே நம்மையும் நயந்துபேச பாடுபடுமே
என்பாரே சுத்தஞானி சுயஞ்சோதி மயமாகியே
இனிக்குமே அமுதம் சுரக்கும் நமக்குள்ளே
சிரஞ்சீவி ஆவோமே அமுதம் உண்டாலே

பாடுபடுமே அதற்குரிய சம்பளம் கிட்டுமே
மயமாகியே அன்பாய் அறிவாய் வாழுவோமே
நமக்குள்ளே நம்மை கண்டால் நாயகனே
உண்டாலே உய்வோமே உன்மத்தம் அடைவோமே

கிட்டுமே மரணமிலா பெருவாழ்வு சத்தியமிதுவே
வாழுவோமே வாழ்வாங்கு வானவர் நாட்டினிலே
நாயகனே நானிலத்தே கொண்டாடி மகிழ்வாரே
அடைவோமே அம்பலவாணர் அற்புதத் திருவடியை

சத்தியமிதுவே சன்மார்க்கம் சமரசம் கொள்வீரே
நாட்டினிலே நன்னெறி தழைக்க உழைப்பீரே
மகிழ்வாரே மாந்தரெலாம் பேரின்பம் பெற்றுய்ய
திருவடியை உணர்த்திக் காட்டுவீர் மகிழ்ந்தே

கொள்வீரே தீட்சை அதுவே செல்வம்
உழைப்பீரே மெய்யுருக கிட்டும் செல்வம்
பெற்றுய்ய அருள்வாள் வாலை செல்வம்
மகிழ்ந்தே இருக்கலாம் எந்நாளும் செல்வம்

கன்னியாகுமரி குருவும் நெய்வேலி சீடர்களும்



குருவின் குடும்பம்

குருவுடன் விஜயன்

சித்தர்கள் போற்றும் வாலை
கன்னியாகுமரி



எங்களைக் காத்தருளும் தாய்!

ஸ்ரீலஸ்ரீ ஞான சற்குரு சிவ செல்வராஜ்

பூவுடல் கண்ட பொன்விழா - 2006

திருவடி சேர்ந்த வெள்ளிவிழா - 2006





நாஞ்சில் ஆப்செட், நாகர்கோவில் Ph 04652-233853